இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 31.03.2026

# வெல்லும் வேட்பாளர்கள்!

**நடக்க இருக்கும் 17- வது சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் வேட்பாளர்கள் மட்டுமல்ல, இவர்கள்தான் நாளைய சட்டமன்ற உறுப்பினர்கள். வெல்லும் வேட்பாளர்கள் ஆவார்கள்.**

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணியானது, உருவான காலம் முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும், அனைத்து வகைப்பட்ட தேர்தல்களிலும் வெற்றியையே பெற்று வருகிறது. 2019 ஆம் ஆண்டு முதல் இக்கூட்டணி தொடர்கிறது. இக்கூட்டணிக்குள் புதிய இயக்கங்கள் சேர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்திய நாட்டுக்கு இரண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்துள்ளது. அந்த இரண்டு தேர்தல்களிலும் இக்கூட்டணி 100 விழுக்காட்டு வெற்றியை தமிழ்நாட்டில் பெற்றுக் கொடுத்தது. அனைத்து இடைத்தேர்தல்களிலும் வென்றது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலிலும் வென்றது.

**2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் வென்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்தது. வரும் ஏப்ரல் 23 ஆம் நாள் நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலிலும் வென்று ஆட்சி அமைக்கப் போகிறது கழகம். இத்தகைய தொடர் வெற்றிப் பயணமாக திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியின் பயணம் அமைந்துள்ளது.**

இதற்கு மிக முக்கியக் காரணம், தோழமை உணர்வு ஆகும். 'இது தேர்தல் கூட்டணி அல்ல, கொள்கைக் கூட்டணி' என்று சொல்லி வருவார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதேபோல், 'எண்ணிக்கையால் ஆனது அல்ல, எண்ணங்களால் ஆனது' என்றும் சொல்வார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கூட்டணிக் கட்சிகளோடு பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது உண்மைதான். இதுதான் ஜனநாயக மாண்பு ஆகும். பேசிப் பேசித்தான் தீர்வுகளை எட்ட முடியும். பேச்சுவார்த்தைகள் மூலமாகத்தான் தோழமை உணர்வும் பலப்படும். அந்த வகையில் தோழமைக் கட்சிகளோடு ஜனநாயக முறைப்படி பேச்சுவார்தைகளை நடத்தியது கழகம்.

அந்த அடிப்படையில் 234 தொகுதிகளும் பங்கீடு செய்யப்பட்டு உள்ளன. இதனை கழகத் தலைவர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள்.

234 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் 164 தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். 70 தொகுதிகள் கூட்டணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திராவிட முன்னேற்றக் கழகம் - 164, காங்கிரஸ் கட்சி - 28, தேசிய முற்போக்கு திராவிட கழகம் - 10, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - 8, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - 5, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் - 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 2, மனிதநேய மக்கள் கட்சி - 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி - 2, மனிதநேய ஜனநாயக கட்சி - 1, முக்குலத்தோர் புலிப்படை - 1, எஸ்.டி.பி.ஐ. - 1, தமிழர் தேசம் கட்சி - 1 தொகுதி** என ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுளது.

தோழமைக்கு ஒதுக்கிய தொகுதிகளில் 11 இடங்களில் அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள். மொத்தம் 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னம் போட்டியிடுகிறது. 59 தொகுதிகளில் கூட்டணிக் கட்சிகள் அதனதன் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்ட 164 வேட்பாளர்களின் தகுதிப் பட்டியலையும் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். **164 பேரில் பட்டம் பெற்றவர்கள் 125 பேர். இதில் பெண்கள் 18 பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். பல்கலைக் கழக ஆராய்ச்சி முனைவர் பட்டம் பெற்றவர்கள் 7 பேர். மருத்துவர்கள் 15 பேர். பொறியியல் பட்டதாரிகள் 17 பேர். சட்டம் படித்தவர்கள் 29 பேர்.**

**இவை அனைத்துக்கும் மேலாக 60-க்கும் மேற்பட்டோர் புதுமுகங்கள். இளைஞர்கள், பெண்கள் அதிலும் புதுமுகங்களை அதிகம் தேர்ந்தெடுத்து அறிவித்துள்ளார் கழகத் தலைவர் அவர்கள்.**

**'234 தொகுதிகளுக்கும் மு.க.ஸ்டாலின்தான் வேட்பாளர், உதயசூரியன்தான் சின்னம் என்ற உணர்வோடு தேர்தல் பணியாற்ற வேண்டும்'** என்று தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். அத்தகைய உணர்வோடு களம் காணத் தயாராகி விட்டார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சோப லட்சம் தொண்டர்கள்.

**"ஏழாவது முறை மட்டுமல்ல எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் தமிழ்நாட்டை ஆள முடியும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். நான் முதலமைச்சர் ஆவதற்கோ - 30 பேர் அமைச்சர் ஆவதற்கோ -200 பேர் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கோ - இதனை நான் சொல்லவில்லை. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடியாம் தமிழ்நாட்டைக் காக்க தகுதியும் திறமையும் உழைப்பும் உள்ள ஒரே படை நமது கருப்பு சிவப்புப் படைதான். தமிழைக் காத்தவர்கள் நாம். தமிழனைக் காத்தவர்கள் நாம்.**

**தமிழ்நாட்டைக் காத்தவர்கள் நாம். காக்கும் கடமை கொண்டவர்கள் நாம். காவல் அரண் நாம்.**

**நம்மை நம்பித்தான் தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டுக்காகத்தான் நாம் இருக்கிறோம். அதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொய்வில்லாமல் தொடர வேண்டும். அதுதான் முக்கியம்"** என்று கழகத் தலைவர் அவர்கள் திருச்சி மாநில மாநாட்டில் குறிப்பிட்டார்கள். இதுவே இலக்கு. இதுவே வெல்லும் இலக்கு ஆகும்.

**வெல்லும் வேட்பாளர்கள் மூலமாக இலக்கை வெல்வோம்!**

## சட்டப்பேரவைத் தேர்தல் – 2026 கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்

# குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. - குழுவினருக்கு - கழகத் தலைவர் பொன்னாடை!

சென்னை – அண்ணா அறிவாலயம் 'கலைஞர் அரங்கில்' நேற்று முன்தினம் (29.3.2026) மாலை, சட்டப்பேரவை – கழகத் தேர்தல் அறிக்கையை வெளியிடும் முன், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க அமைக்கப்பட்ட – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையிலான குழுவினருக்குப் பொன்னாடை அணிவித்து கௌரவப்படுத்தினார்.

கழகத் தலைவரால் கௌரவிக்கப்பட்ட – திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினர் விவரம் வருமாறு:-

**கனிமொழி கருணாநிதி** - குழுத் தலைவர்
துணைப் பொதுச்செயலாளர்

**டி.கே.எஸ்.இளங்கோவன்**
செய்தித் தொடர்பு தலைவர்

**முனைவர் கோவி.செழியன்**
வர்த்தகர் அணி துணைத் தலைவர்

**முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்**
சொத்து பாதுகாப்புக்குழு செயலாளர்

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா**
தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்

**எம்.எம்.அப்துல்லா**
அயலக அணிச் செயலாளர்

**பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
செய்தித் தொடர்பு செயலாளர்

**மருத்துவர் எழிலன் நாகநாதன்**
மருத்துவ அணிச் செயலாளர்

**கார்த்திகேய சிவசேனாபதி**
சுற்றுச்சூழல் அணிச் செயலாளர்

**ஆ. தமிழரசி ரவிக்குமார்**
மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர்

**ஜி.சந்தானம்**
இந்திய ஆட்சிப் பணி அலுவலர் (ஓய்வு)

**சுரேஷ் சம்பந்தம்**
ஒருங்கிணைப்பாளர், Convenor, Dream Tamilnadu.



## ம.தி.மு.க. போட்டியிடும்

# 4 தொகுதிகளின் வேட்பாளர்கள்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவிப்பு!

சென்னை, மார்ச் 31-

சென்னை எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நான்கு சட்டமன்ற தொகுதிக்கான வேட்பாளர் பட்டியலை அறிவித்தார். அதன்பின் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

"2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி



அங்கம் வகிக்கும் ம.தி.மு.க. விற்கு நான்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பங்களை பெற்றோம், அதன் பின் நபர்களை தேர்ந்தெடுத்து தொகுதி நிலவரம் மற்றும் அவர்களுடைய நிலைமை பற்றி கேட்டிருந்தோம், அதன் அடிப்படையில் மொடக்குறிச்சி செந்தில்நாதன் உதயசூரியன் சின்னத்தில், மதுரை தெற்கு பூமிநாதன் உதயசூரியன் சின்னத்தில், கடையநல்லூர் தி.மு.ராஜேந்திரன் உதயசூரியன் சின்னத்தில், சீர்காழி (தனி) செந்தில் செல்வன் தனி சின்னத்தில் போட்டியிட உள்ளனர்.

**2ம் தேதி தேர்தல் பிரச்சாரம்**

வரும் 2ம் தேதி பிரச்சாரத்தை தொடங்க உள்ளேன். தி.மு.க. மற்றும் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வைத்திருக்கக்கூடிய அனைத்து கட்சிகளுக்கும் பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளேன். திராவிட இயக்கத்தை அண்ணா, பெரியார், கலைஞர், உருவாக்கியிருக்க கூடிய கோட்டைக்கு எந்த சேதமும் ஏற்பட அனுமதிக்க கூடாது, பிரச்சாரத்தில் இதனை முதன்மையாக வைக்க இருக்கிறோம்.

**தி.மு.கழக கூட்டணி வெற்றி உறுதி!**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர வேண்டும், ஒன்றிய அரசு ஓரவஞ்சனையாக செயல்பட்ட போதும் மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை தீட்டி உள்ளார்கள். இதனை மக்களிடம் கொண்டு செல்வோம், திராவிட முன்னேற்ற கழகம் வெற்றி பெற உங்களின் வாக்குகளை செலுத்துங்கள் என பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறேன்" என்றார்.

## 2026-ல் திராவிட மாடல் 2.0 ஆட்சியின் வெற்றி பிரகடன பிரச்சாரம்!

# திருவாரூர் வருகைதரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## பூண்டி கே.கலைவாணன் அறிக்கை!

*திருவாரூர், மார்ச் 31 -*

*எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரையை தொடங்கிவைத்து உரையாற்றிட, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூருக்கு இன்று (31.03.2026) வருகைதரும் திராவிட நாயகர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் தலைமையில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணிகளின் சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட இருக்கிறது.*

*இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர்தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-*

*இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடுகளே திரும்பி பார்க்கும் அளவுக்கு அனைத்துத் தரப்பு மக்களுக்குமான பொற்கால ஆட்சியை தந்துகொண்டிருக்கும் முதலமைச்சர் தளபதி அவர்கள், இந்த சந்ததிகளுக்கு மட்டுமின்றி எதிர்கால சந்ததிகளுக்கும் சேர்த்து தொலைநோக்கு பார்வையோடு எண்ணற்ற அரிய*



*திட்டங்களை தந்து அதனை நிறைவேற்றி வருகிறார்.*

*மக்கள் அனைவருமே, தங்களுக்கான திட்டங்களை தங்கள் இடத்தில் இருந்து சிந்திக்கும் ஒரு முதல்வராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை கொண்டாடும் நிலையில், வரப்போகும் 2026 தேர்தலிலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியை தேர்ந்தெடுக்க தயாராகிவிட்டனர்.*

*இந்த நிலையில் கழகத்தின் தலைமையில், பொற்கால ஆட்சி 2026லும் திராவிட நாயகர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய ஆளுமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சியாக தொடர இருக்கும், கழகக் கூட்டணியின் உறுதி செய்யப்பட்ட வெற்றிக்கான முதல்படியை துவக்கி வைத்து, மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு தந்த நமது மாவட்டமான திருவாரூருக்கு வருகைதர இருக்கிறார்கள்.*

*"எல்லோருக்கும் எல்லாம்" என ஏழைகளின் கண்ணீர் துடைத்து, மீட்டர் இல்லா மின்சாரம், நெல்கொள்முதல் விலை உயர்வு உள்ளிட்ட விவசாயிகளின் உள்ளம் மகிழ்வித்து, வெல்லும் தமிழ் பெண்களின் பெருமையை உலகறிய செய்து, "இல்லத்தரசி திட்டம்" தந்த ஈடு இணையில்லா தலைவராய், சமூக புரட்சியாய் அனைவருக்கும் கல்விதந்து, எட்டாம் வகுப்புவரை காலை உணவுதந்து திட்டத்தை விரிவு படுத்தித்தந்திருக்கும் நாம் திராவிட நாயகர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று, அவரின் வெற்றி முழக்க உரையை செவி மடுக்கவும்.*

*அனைத்து தொகுதிகளிலும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற செய்து திராவிட மடல் 2.0 ஆட்சி தொடர்ச்சியின் உத்தரவாதத்தை தலைவருக்கு சமர்ப்பிக்கும் வகையிலும் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக் கழகம் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியினரும், கழக தோழர்களும், தாய்மார்களும், சமூக, பொருளாதார, கல்வி ஆர்வலர்களும், இளைஞர்களும், பொதுமக்களும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*



நாகை மாவட்டம், நாகை நகர தி.மு.க. தேர்தல் பணிமனையில் வழக்கறிஞர் அணி சார்பில் 2026 சட்டமன்றத் தேர்தல் முன்னிட்டு War Room (வார் ரூமை) நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் திறந்து வைத்தார். உடன் தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், மாவட்டப் பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரச் செயலாளர் – நகர மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ் எம்.ஏ.கணேசன், நகர துணைச் செயலாளர்கள் பி.திலகர், வெற்றிலைக் கடை சிவா, வழக்கறிஞர் அணி ஆர்.செல்வராஜ், பூவை ஆர்.ஜி.முருக்கு, சபாரத்தினம், அழகுராஜா, பாஸ்கர் மற்றும் பலர் உள்ளனர்.